**இலங்கை வில்வித்தைச் சங்கம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை வில்வித்தைச் சங்கத்தின் (“சங்கம்”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் எண் விளையாட்டு (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 21-அ இற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் பத்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க சங்கத்தின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதும் கணக்காய்வாளர் அறிக்கையை வெளியிடுவதும் எனது பொறுப்பு ஆகும். இருப்பினும், இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியவில்லை.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு 5 ஆண்டுகளுக்கும் மேலாக மீள செலுத்தக்கூடிய வைப்புத்தொகையாக ரூபா. 32,000 தொயையொன்று காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதிக்கூற்றில் பெறவேண்டியதாக இந்தத் தொகை காட்டப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிதியாண்டில் இந்த வைப்புத் தொகையினை நாங்கள் பதிவழிப்பு செய்வோம். | பெறவேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |
| (ஆ) | சங்கத்திற்கான விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சிலிருந்து பெறவேண்டிய மீதியாக ரூபா. 1,018,337 தொகையினை காட்டியது. எவ்வாறாயினும், சங்கத்திற்கு செலுத்த வேண்டிய மீதியாக 2024 ஒக்தோபர் 30 ஆம் திகதி வரையிலும் கூட அமைச்சினால் இந்த மீதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, அத்தகைய மீதியின் துல்லியத்தன்மையினை கணக்காய்வில் உறுதிசெய்ய முடிந்திருக்கல்லை. | சில விசாரணைகள் மற்றும் ஆதார ஆவணங்களின் தேடல்களைச் மேற்கொண்ட பின்னர், தற்போதைய நிதியாண்டு கணக்குகளில் தொகையை மீள அறவீட செய்வதற்கு அல்லது பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை வரிசை அமைச்சானது உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்ளின் பிரகாரம் (ரூபா) | தொடர் புடைய பதிவேட்டின் பிரகாரம் (ரூபா) | வேறுபாடு (ரூபா) | முகாமையின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| வங்கியில் உள்ள பணம் (சனவரி முதல் திசெம்பர் 2023 வரை) | (1,225,502) | 2,606,248 | **3,831,750** | எங்களால் முடிந்தளவான சிறந்த முயற்சியில் பின்னோக்கிப் பார்க்கக்கூடிய அடிப்படையில் இதைச் செய்வதற்கு நாங்கள் முயற்சிப்போம். | காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு வங்கி இணக்கங்களினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை | இல்லாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | செலவுகள் | 354,400 | அங்கீகாரங்கள் மற்றும் சான்றுறுதிப்படுத்தல்கள் | பொறுப்பான அலுவலக நிருவாகிகள் அடுத்தடுத்த ஆண்டுகளில் தங்கள் பதவியைத் தொடரவில்லை என்பதாலும், தற்போதைய குழுவானது புதிய குழுவாக இருப்பதாலும், இந்தக் கேள்விகளுக்கு சாதகமான பதிலை வழங்க எங்களால் முடியாதுள்ளது. | கொடுப்பனவுகளின் துல்லியத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் தொடர்புடைய துணை ஆவணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | தேசிய நிகழ்வுகள் தொடர்பாக கொடுப்பனவு செய்யப் பட்டவைகள் | 432,573 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், விலைப்பட்டியல்கள் மற்றும் பட்டியல்கள் | | |
| (ஆ) | வருமானம் | 398,000 | பற்றுச்சீட்டுக்கள், நன் கொடையாளர்களின் சான்றிதழ்கள் மற்றும் வேறு ஏதேனும் துணை ஆவணங்கள் போன்றவை. | பொறுப்பான அலுவலக நிருவாகிகள் அடுத்தடுத்த ஆண்டுகளில் தங்கள் பதவியைத் தொடரவில்லை என்பதாலும், தற்போதைய குழுவானது புதிய குழுவாக இருப்பதாலும், இந்தக் கேள்விகளுக்கு சாதகமான பதிலை வழங்க எங்களால் முடியாதுள்ளது. | வருமானத்தின் துல்லியத் தன்மையினை உறுதி செய்வதற்கு தேவையான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | நடைமுறை அல்லா | 20,754,649 | பௌதீக ரீதியான உறுதிப்படுத்தல் | நிலையான சொத்துக்களை அடையாளம் காண்பதற்கான | நிலையான சொத்துக்களின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | | அறிக்கை மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு | நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்தும் கணக்கெடுப்பை நாங்கள் ஏற்கனவே தொடங்கியுள்ளோம். | பௌதீக ரீதியான இரக்கும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு ஒரு கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பெற வேண்டிய மீதி | 54,727 | விரிவான அட்டவணை | இந்த மீதியானது நிதியாண்டு 2022 இல் இருந்து தொடர்வதை நாங்கள் அவதானிக்கின்றோம். எனவே, மீள அறவீடு செய்யும் நடவடிக்கைகளைத் ஆரம்பிப்பதற்கு எவ்வித துணை அட்டவணைகளும் இல்லாத நிலையில், இந்த மீதி 2024 இன் கணக்குகளில் பதிவழிப்பு செய்யப்படும். | பெறவேண்டிய நிலுவைகளின் மீதியினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விரிவான அட்டவணையினை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 கணக்கீட்டு பெறவேண்டியவைகள் மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டியவைகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெறவேண்டிய மீதிகளின் மொத்தம் ரூபா. 1,853,425, ரூபா.285,500 மற்றும் ரூபா.54,727 ஆகியவை முறையே 05 ஆண்டுகள், 03 ஆண்டுகள் மற்றும் ஒரு வருடத்திற்கு மேலாக மீளஅறவீடு செய்யப்படாமல் அல்லது நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளப்படாமல் நிலுவையில் காணப்பட்டன. | கருத்துகள் பெறப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் உள்ள மிதிகளை தாமதமின்றி வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| செலுத்த வேண்டிய நிலுவைகளின் மொத்தம் ரூபா.746,062 மற்றும் ரூபா.69,100 முறையே 05 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் அல்லது நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமல் நிலுவையில் காணப்பட்டன. | கருத்துகள் பெறப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையினை தாமதமின்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா. 628,277 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 926,919 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 298,642 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கான முக்கிய காரணம் வருமானம் ரூபா 2,127,332 குறைந்ததை விட செலவினம் ரூபா 2,425,975 குறைந்துள்ளமை ஆகும்.

## 3. கணக்களிதன்மை மற்றும் நல்லாளுகை

### 3.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒவ்வொரு போட்டிக்கும் விரிவான வரவு செலவுத் திட்டங்களை அங்கீகரிக்காதமையினால் சங்கத்தால் அதன் செலவுகளை வினைத்திறனாக கட்டுப்படுத்த முடிந்திருக்கவில்லை. | கருத்துகள் பெறப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு போட்டிக்கும் விரிவான வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் எண் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க ஒழுங்குமுறையின் பிரிவு 7(xii) இன் பகுதி III இன் பிரகாரம், ஆண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கீகாரத்திற்காக செயல் நடவடிக்கை திட்டத்தினை அனுப்பியிருக்கவில்லை. | கருத்துகள் பெறப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க ஒழுங்குமுறைகளின் பிரிவு 7 (xi) இன் பகுதி III இன் பிரகாரம், சங்கத்தால் ஒரு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துகள் பெறப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |